
# மிகுதியாக
# [வேண்டியமட்டும்]
# கேளுங்கள்

---

## ASK ABUNDANTLY

(இப்புத்தகம் சகோதரன் பிரன்ஹாம் பேசிய வெவ்வேறு செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது)



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

## யோவான் 16:24

இதுவரைக்கும் நீங்கள் என்
நாமத்தினாலே ஒன்றும்
கேட்கவில்லை; கேளுங்கள்,
அப்பொழுது உங்கள் சந்தோஷம்
நிறைவாயிருக்கும்படி
பெற்றுக்கொள்வீர்கள்.

---

Hitherto have ye asked nothing in my name: ask, and ye shall receive, that your joy may be full.

★★★★★



(குறிப்பு: இந்தப் புத்தகத்தின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)

# மிகுதியாக (வேண்டியமட்டும்) கேளுங்கள்

## (ASK ABUNDANTLY)

36. வயதான எலியாவை (Elijah) என்னால் எண்ணிப்பார்க்க முடிகிறது. எலிசா (Elisha) தன்னுடைய சால்வையை அவன் மேல் எறிந்து, “என்னைப் பின்பற்றிவா” என்று கூறினபோது. அவன் தோத்தானி லிருந்து போனான். எலிசா தொடர்ந்து அவனைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தான். அவன் தீர்க்கதரிசிகளின் பள்ளிக்குச் சென் றான். இவனோ அவனைப் பின்தொடர்ந்தான். அவன் தொடர்ந்து யோர்தான் வரைக்கும் சென்றான். மிகவும் அழகான முன்னடை யாளம்... எனக்கு நேரம் இருந்திருக்குமானால்,

அது வேகமாக போய்க் கொண்டிருப்பதை நான் காண்கிறேன். ஆனால் நான் அதற்கு வர எனக்கு நேரம் இருக்கிறது. அவன் தோத்தானை விட்டுப் போனபோது, அது எப்படியிருந்தது, லூத்தர் மூலமாக நீதி மானாக்கப்படுதல். அவன் இவனோடு கூட தீர்க்கதரிசிகளின் பள்ளி வரைக்கும் சென் றான்: கிறிஸ்து மற்றும் சபையினுடைய மிகவும் அழகான அடையாளம், வயதான தீர்க்கதரிசியும் வாலிபனும். (அவர்கள்) அங்கே தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கு ஏறிச் சென்றார்கள். லூத்தர் (Luther), பரிசுத்தமாக் கப்படுதல் (sanctification). ஆனால் இறுதி யாக அவன் யோர்தானுக்கு இறங்கிச் சென் றான், அங்கே தான் எல்லாமும் மரிக்க வேண்டியிருந்தது.

எலியா, "நீ திரும்பிப் போய்விடுவது நல்லது" என்றான்.

இவனோ, "நான் திரும்பிப்போக மாட் டேன் என்று உம்முடைய ஜீவனைக்கொண்டு (As your soul lives) (சொல்லுகிறேன்)"

என்றான். இவன் அவனோடு தரித்திருக்கப் போவதாக இருந்தான். எனக்கு அது பிடிக்கும். அதை இறுக்கமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் (Hold on). எனவே அவன் தன்னுடைய சால்வையை எடுத்து, யோர்தானை அடித்தான். அவர்கள் யோர் தானைக் கடந்து சென்றார்கள். லூத்தர், வெஸ்லி, பெந்தெகோஸ்தே, மூன்று காலங் கள், இருண்ட காலத்தின் இந்தப் பக்கத்தில் மூன்று பொன் குத்துவிளக்குகள் (golden candlesticks).

37. அவர்கள் கடந்து சென்றபோது, மறுகரையை அடைந்தார்கள். அப்போது, அவன், "இப்பொழுது, நீ கேட்டிருக்கிறாய். உனக்கு என்ன விருப்பம் இருந்தாலும், அதைக் கேள், நான் அதை உனக்குத் தருவேன்" என்றான். கிறிஸ்துவுக்கு பரிபூரண முன்னடையாளம்.

"சரி," அவன், "உம்மிடத்திலுள்ள ஆவி எனக்கு இரட்டிப்பாக கிடைக்க வேண்டும்" என்றான். ஆமென். கேட்க நீங்கள் பயப்

படாதீர்கள். மிகுதியாக (வேண்டியமட்டும்) கேளுங்கள். “நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. உங்களுக்கு விசுவாசம் இல்லாத காரணத்தினால், நீங்கள் வேண்டிக்கொள்வதில்லை.” அது சரியே. கேளுங்கள், பெரிய அளவில் [**(நிறைய) ; (ஏராளமாகக்)**] கேளுங்கள் (ask a whole lot). தேவன் உங்களுக்கு ஏராளமாகக் கொடுப்பார். மிக அதிகமான பெரிய அளவு விசுவாசத்தைக் (a lot of faith) கொண்டிருங்கள்.

அன்றொரு நாள் ஒரு மனிதர் என்னிடம் கூறினார்; அவர், “இன்னும் ஒரு பழைய மாடல்-T ஃபோர்டு காரை ஓட்டிக் கொண்டிருந்தார்” என்பதாகக் கூறினார். தொடர்ந்து அவர், “ஒருநாள் அவர் கொஞ்சம் நல்ல விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள நேர்ந்தது, தேவன் அவருக்கு ஒரு ப்யூக் காரைக் (Buick) கொடுத்தார். நான் ஒரு ப்யூக் விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டேன், (அதன் பிறகு) நான்-நான் காடிலாக் விசுவாசத்திற்காக

(Cadillac faith) ஜெபித்துக் கொண்டிருக்கி றேன்" என்றார். சரி. அது நல்லது. அது சரியே. தொடர்ந்து செல்லுங்கள். நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்களோ, அதை இறுகப் பிடித்துக்கொள்ளுங்கள். தேவன் அதைக் கொடுப்பார். அவர் ஃபோர்டு விசுவாசத்தைத் தான் பெற்றிருக்கிறார், எனவே அப்படி யானால் ஃபோர்டு-உடன் தரித்திருங்கள், அதெல்லாம் சரிதான். மேலும் எனவே... நாம் இன்னும் கொஞ்சம் அதிகமான விசுவாசத் தைப் பெற்றுக்கொள்வோம். சரி.

***செய்தி:*** தேவன் மோசேக்கு உத்தரவு கொடுத்தல், மே 8, 1953

★★★★★

32. இப்பொழுது, அவர்கள் யோர்தா னுக்கு இறங்கி, அதைக் கடக்கும் நேரம் வந்த போது. அவர் பாதையை உண்டாக் கினார். அப்போது அவன் அதைக் கடந்து சென்றபோது (பரிசுத்த ஆவி சபையின் அந்தக் கட்டம்), "இப்பொழுது, நான் உன்

னிடம் ஒரு காரியத்தைக் கேட்க விரும்புகிறேன்" என்றான்.

"எனவே உனக்கு என்ன வேண்டும்?"

அதற்கு அவன், "உம்முடைய ஆவியின் இரட்டிப்பான பங்கு என்மேல் வர வேண்டும்" என்றான். அதற்காக அந்தவிதமாகத்தான் கேட்க வேண்டும். பயப்பட வேண்டாம். மிகப்பெரிய அளவில் கேளுங்கள். இயேசு, "நீங்கள் விசுவாசியாத காரணத்தினால் - நீங்கள் விண்ணப்பம் பண்ணாத காரணத்தினால் உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. நீங்கள் விசுவாசிக்காத காரணத்தினால் நீங்கள் கேட்பதில்லை. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி, மிகுதியாகக் கேளுங்கள்" என்று சொல்லியிருக்கிறார். பெரிய அளவில் [**[நிறைய] ; [ஏராளமாகக்]**] கேளுங்கள் (ask a whole lot). "தேவனே, என்னை வெறுமனே கொஞ்சமாகக் குணமாக்க வேண்டாம்; எனக்கு முழுமையாக சுகத்தைத் தாரும்." நான் என்னைத்தானே துக்கமாக வைத்துக்கொள்

ளும்படிக்கு போதுமான மார்க்கத்தை நான் கொண்டிருக்க விடாதேயும்; நான் கிறிஸ்து வுக்குள் ஜீவிக்க முடியும்படிக்கு, பாவத்திற்கு தூரமாக என்னைக் கொன்றுபோடும் (kill me out to sin). அது சரியே.

33. ஒருக்கால் நான் எப்போதாவது என்னுடைய தலையைத் தாழ்த்தும்படிக்கு நான் ஒருசில அடிகள் பின்னோக்கி போக முடியும் வண்ணமாக என்னை ஆக்காதேயும்; நான் சத்தமிட முடியும்படிக்கு அவ்வண்ண மாக என்னை ஆக்கியருளும். நான் என்னுடைய வாயைத் திறந்து, பாடி, தேவனுக்கு துதிகளை சத்தமிடும் வண்ணமாக என்னை ஆக்கும். முழு காரியத்தையும் எனக்குக் கொடும். நான் ஞானஸ்நானத்தைக் கொண்டிருக்கட்டும். உலகத்தின் காரியங்க ளுக்கு என்னைக் கொன்றுபோடும், அங்கே ஜனங்கள் என்னைச் சுற்றிலும் இருக்கிறார் கள். நான் சபைக்குப் போகும்போது, நான் உம்மை ஆராதிக்கட்டும். அது சரியே.

மற்ற யாராவது என்ன நினைக்கிறார்கள் என்பது ஒரு பொருட்டேயல்ல, அப்படியே என்னை வெளியே கொன்று போடும். இன்றிரவு அதுதான் நமக்கு அவசியமாயிருக்கிறது, ஒரு யோர்தான் அனுபவம், அது சரிதானா? நம்மில் அநேகர் தீர்க்கதரிசிகளின் பள்ளியைப் போன்று, குன்றின் மறுபக்கத்தில் நெருங்கி நின்று, நோயினால் பீடிக்கப்பட்டவர்களாக நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இன்றிரவு, நாம் ஆற்றைக் கடந்து செல்லுவோம்.

“நல்லது, செல்வி இன்னார் இன்னார் சுகத்தைப் பெற்றுவிட்டார்; அவளுக்கு புற்று நோய் இருந்தது. திரு. இன்னார்-இன்னார் சக்கர நாற்காலியில் இருந்தார்; அவர் நடந்து விட்டார்” என்று கூறலாம். உங்களைக் குறித்து என்ன? இன்றிரவு நாம் கடப்போம் (cross over). ஆமென்.

***செய்தி:*** எலியாவும் எலிசாவும், மார்ச் 4, 1954

★★★★★

13. இயேசு ஒருமுறை ஏன் இங்கே நின்றுகொண்டு, அறுவடையின்மேல் அக்கறை கொண்டார்... அவர் அறுவடையின் ஆண்டவராக இருந்தார் என்று எத்தனை பேர் விசுவாசிக்கிறீர்கள்? நிச்சயமாக, நாமெல்லாரும் விசுவாசிக்கிறோம். அவர் அறுவடையின் மேல் அக்கறை கொண்டவராய், "அறுவடையின் ஆண்டவர் தம்முடைய அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி நீங்கள் வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார். இப்பொழுது, வேறு வார்த்தைகளில் (கூறினால்), "செய்ய வேண்டும் என்று எனக்கு தெரிந்ததைச் செய்யும்படிக்கு, நீங்கள் என்னிடம் கேளுங்கள்; ஆனாலும், நீங்கள் அதற்காக என்னிடம் கேட்க வேண்டும்." "நீங்கள் விண்ணப்பம் செய்யாதிருக்கிறபடியினால், உங்களுக்கு சித்திக்கிறதில்லை" என்று சொல்லியிருக்கிறார். அது சரிதானா? "நீங்கள் விசுவாசியாத காரணத்தினால், நீங்கள் கேட்பதில்லை."

14. ஒரு தீர்க்கதரிசி ஒருமுறை ஒரு குச்சியை அல்லது ஒரு அம்பைத் தன்னுடைய கையில் வைத்திருந்து, அவன் அந்த இராஜாவிடம், "தரையில் அடியும்" என்றான், உங்களுக்குத் தெரியும். அவன் அதை இரண்டு அல்லது மூன்று முறைகள் மட்டுமே அடித்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். "நீர் ஏன் அதை இன்னும் அதிக முறைகள் அடிக்கவில்லை?" என்று கேட் டான். புரிகிறதா? நாமே செய்ய வேண்டிய குறிப்பிட்ட காரியங்கள் உண்டு. நான் உண்மையாகவே இன்னும் கொஞ்சம் அதிக மான ஜனங்களைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்து, அவர்கள் மேல் கரங்களை வைக்க முடிந்திருக்குமா என்று நம்புகிறேன், குறிப் பாக அமெரிக்காவில்... நான் இந்த தேசம் முழுவதும் மீண்டும் மீண்டும் மீண்டுமாக ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மறுபடி மறுபடியுமாக கடந்து சென்றிருக்கி றேன், பத்தாயிரக்கணக்கான காரியங்கள் செய்யப்பட்டுள்ளன. அற்புதங்கள், அந்த அடையாளங்கள், மேலும் அதைப்போன்ற

வைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லாருமே அதைக்குறித்த எல்லாவற்றையும் அறிந்து, அப்படியே ஜனங்களுக்காக ஜெபித்து, பிறகு ஒரு நாளோ இரண்டு நாளோ தாமதித்து, என்ன சம்பவிக்கிறது என்று கவனிக்கும் இடமாகிய இதைப் போன்ற ஒரு குழுவினரிடம் நான் போயி ருப்பேனா என்று நம்புகிறேன், அவ்வாறு தான் அது தோன்றுகிறது; அங்கே ஏதோ வொரு...?... இருந்தாக வேண்டும்... மேலும் அவர் சொன்னார்... பாருங்கள். கவனியுங்கள். அவருடைய வார்த்தையைச் ஆராய்ந்து பாருங்கள். "நான் வியாதிப்பட்ட ஜனங்களுக் காக ஜெபிக்கவே பிறந்தேன்." பாருங்கள்? அது வெறுமனே அவர்களுக்காக ஜெபிப்ப தாக இருந்தது. ஜெபமானது காரியங்களை மாற்றி விடுகிறது. சிலசமயங்களில், அவர்கள் அதை தங்களுடைய சிந்தையில் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், ஜெபமானது காரியங்களை மாற்றிவிடுகிறது. புரிகிறதா? அமெரிக்க தேசம் முழுவதிலும் உள்ள பெரும்பாலும் ஒவ்வொருவருமே அதைக்

குறித்த எல்லாவற்றையும் மற்றும் ஒவ்வொன்றையும் அறிந்திருக்கிறார்கள்.

***செய்தி:*** கிரியையில் விசுவாசம், அக்டோபர் 3, 1955

★★★★★

10. நாம் விசுவாசிக்கிறோம்... இப்பொழுது, அவர் அதைச் செய்திருக்கிறார், நம்மால் மாத்திரம் அவர்கள் அதை விசுவாசிக்கும்படி செய்யக் கூடுமானால்; அதுதான் காரியம். பாருங்கள், உங்களுடைய இரட்சிப்பைப் போலவே, சுகமும் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டு விட்டது. பாருங்கள், நான், "நீங்கள் எப்போது இரட்சிக்கப்பட்டீர்கள்?" என்று கேட்கிறேன்.

நீங்களும், "ஓ, இரண்டு வருடங்களுக்கு முன்பு, ஐந்து வருடங்களுக்கு முன்பு, அல்லது இருபது வருடங்களுக்கு முன்பு" என்று கூறியிருக்கலாம்.

இல்லை, அது தவறு. இயேசு கல்வாரியில் மரித்தபோதே, 1900 வருடங்களுக்கு முன்பாகவே நீங்கள் இரட்சிக்கப்பட்டு

விட்டீர்கள். நீங்கள் இரண்டு வருடங்களுக்கு முன்போ அல்லது பத்து வருடங்களுக்கு முன்போ அதை ஏற்றுக்கொண்டீர்கள். புரிகிறதா? அங்கே தான், தேவனுக்குத் தேவையாயிருந்தவைகள் ஆயத்தமாக்கப்படு வதற்கு முன்பாகவே, பாவத்திற்கான கேள் விக்கு தீர்வுகாணப்பட்டது, கல்வாரியில் முழு கிரயமும் முழுமையாக செலுத்தப்பட்டு விட்டது. மேலும் இப்பொழுது, இயேசு எதற் காக மரித்தாரே அந்த மீட்பின் ஆசீர் வாதங்கள் எல்லாமே விசுவாசிகளாகிய உங்கள் எல்லாருடைய தனிப்பட்ட சொத்தாக உள்ளது. நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம் என்னவென்றால், வெறுமனே அதை விசுவாசித்து, அதை ஏற்றுக்கொண்டு, அது உங்களுடையது என்று அழைப்பது தான்.

ஒரு மனிதன் தேவனுடைய ஆவியி னால் மறுபடியும் பிறக்கும் போது, ஜீவிய பிரயாணம் முழுவதும் அவனுக்கு நீடித் திருக்கும் ஒரு காசோலை புத்தகத்தை தேவன் அவனுக்குக் கொடுக்கிறார். ஒவ் வொரு காசோலையின் கீழேயும் இயேசுவின்

பெயர் அதில் கையொப்பமிடப்பட்டிருக்கிறது, நீங்கள் எந்த மீட்பின் ஆசீர்வாதத்திற்காகவும் அதில் எழுதி நிரப்புங்கள் (fill it out). அது உங்களுடையது, ஏற்கனவே கிரயம் செலுத்தப்பட்டு விட்டது. இப்பொழுது, அது பணமாக மாற்றப்படாதோ என்று நிச்சயமாக பயப்பட வேண்டாம். உங்களுக்கு பயம் இருக்குமானால், நீங்கள் அந்த புத்தகத்தை அப்படியே உங்கள் பாக்கெட்டிலேயே வைத்திருங்கள்.

11. உங்களுக்குத் தெரியும், சுவிசேஷ வேலையில், பத்து வருடங்களாக என்னுடைய பிரயாணங்களில்... நான் 23 வருடங்களாக கர்த்தருடைய சேவையில் இருக்கிறேன், நான் இரண்டு வகைப்பட்ட ஜனங்களைக் கண்டுபிடித்தேன், அது அடிப்படைவாதிகள் மற்றும் பெந்தெகோஸ்தேயினர். அடிப்படைவாதிகள் தாங்கள் எங்கே நின்றுகொண்டிருக்கிறார்கள் என்பதை நிலைரீதியாக அறிந்திருக்கிறார்கள், ஆனால் அதனோடு கூட அவர்களுக்கு அதிகமாக விசுவாசம் கிடையாது. பெந்தெகோஸ்தேயினரிடமோ

நிறைய விசுவாசம் உண்டு, ஆனால் அவர்கள் யாரென்றும் அவர்கள் எங்கே நின்று கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களுக்குத் தெரியாது.

ஒரு மனிதனுக்கு வங்கியில் பணமிருந்தும், ஒரு காசோலையை எப்படி எழுதுவது என்று தெரியாமல் இருப்பது போன்று அது இருக்கிறது. மற்ற மனிதனுக்கோ ஒரு காசோலையை எழுத முடியும், ஆயினும் அவனுக்கு வங்கியில் எந்தப் பணமும் இல்லை. எனவே உங்களால் அவர்கள் இருவரையும் எப்பொழுதாவது ஒன்றாக சேர்க்க முடியுமானால், நீங்கள் உண்மையிலேயே அதைக் கொண்டிருக்கிறீர்கள். ஹா.

12. எனவே நீங்கள் எப்பொழுதாவது பெந்தெகோஸ்தே ஜனங்கள் மத்தியிலுள்ள மிகவும் நல்ல அடிப்படை விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளவோ, அல்லது பெந்தெகோஸ்தே ஜனங்களிடம் உள்ள அடிப்படை உபதேசத்தைப் பெறவோ முடிந்தால், மேலும்... அல்லது அதற்கு மாறாகவோ (vice

versa) (இருந்தால்), அந்தக் கூட்டமானது எப்படியிருக்கும் என்பதைக் காண விரும்பு கிறேன். நீங்கள் தேவனுடைய குமாரர்களாக வும் குமாரத்திகளாகவும் இருப்பீர்கள் என்று அல்ல, நீங்கள் சரியாக இப்பொழுதே தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளு மாக இருக்கிறீர்கள் என்பதை ஜனங்கள் உணர்ந்து கொள்ளும்போது, நிகழ்காலம்.

நீங்கள் அதை ஏதோவொரு இடத்தி லுள்ள ஆயிரவருட அரசாட்சிக்கு (அந்த)வித மாக தள்ளி விடுகிறீர்கள், தூரமாக ஆயிர வருட அரசாட்சியில் எல்லா ஆசீர்வாதங் களையும் தள்ளிவிடுகிறீர்கள். ஏன், அது சரியாக இப்பொழுதே. ஆயிரவருட அரசாட் சியில் தெய்வீக சுகமளித்தல் அவசியமிருக் காது. நாம்... இப்பொழுதே, நாம் அதைக் கொண்டிருக்கிறோம். நாம் தேவ குமாரர் களாக இருக்க மாட்டோம், ஆனால் இப்பொ ழுதே தேவ குமாரர்களாகவும், சுதந்தரவாளிக ளாகவும் (heirs), இயேசுவோடு உடன் சுதந்தரவாளிகளாகவும் இருக்கிறோம். இயேசு கல்வாரியில் எதற்காக மரித்தாரோ அந்த

எல்லாமும் உங்களுக்கு சொந்தமாக உள்ளது. ஆமென்.

சகோதரனே, சாத்தானுக்கு அது பிடிக் காது, ஏனென்றால்... ஜனங்கள் மாத்திரம் உணர்ந்து, தேவனை அவருடைய வார்த்தை யில் எடுக்க விருப்பமுள்ளவர்களாக இருந் தால், நீங்கள்-நீங்கள் அப்படியே கடினமாக... நல்லது, அது அளவில்லாததாய் இருக்கிறது.

13. நான் இங்கே சமீபத்தில் என்னிடம் பேசிக் கொண்டிருந்த ஒரு டாக்டரிடம் பேசிக் கொண்டிருந்தேன், அவர், "ஓ, நீர் ஒரு ஊழியக்காரர்" என்றார்.

அதற்கு நான், "ஆம், ஐயா" என்றேன்.

அவர், "உமக்குத் தெரியும், நான் ஏறக்குறைய நான்கு வருடங்களாக அந்தக் காரியங்களை படித்தேன்" என்றார்.

நான், "நீர் நன்றாகத் தானே ஓடினீர். எது உம்மை தடைசெய்தது?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "ஓ, அங்கே அதில் எதுவுமேயில்லை என்பதை நான் கண்டு

பிடிக்க வேண்டியிருந்தது. நீர்... நான் உம் மிடம் கூறுகிறேன், நான் ஒரு ஊழியக்கார னாக இருக்கும்படி நான்கு வருடங்களாக அதைப் படித்தேன். அதன்பிறகு நான் கண்டு பிடிக்க நேர்ந்தது என்னவென்றால், ஏன், நான் முழுவதும் குழப்பம் அடைந்து விட்டேன், மேலும் நான்... நான்... காரியங்கள்" என்றார்.

நான், "இப்பொழுது, இங்கேதான் அது இருக்கிறது. இப்பொழுது, அங்கே உமக்கு ஒரு x-ray இயந்திரம் உள்ளது. நீர் ஒரு மனித சரீரத்தையும் மற்றவைகளையும் ஆராய்ந்து பார்க்க முடியும். நல்லது, அது அற்புதமானது. அது அறிவின் விருட்சமாக இருக்கிறது. அது ஏதேன் தோட்டத்தில் இருந்தது, ஏதேன் முதற்கொண்டு, மனிதன் அந்த மரத்திலிருந்து புசித்து வருகிறான்" என்றேன். ஆனால் நான், "அதற்கு ஒரு வரம்பு உண்டு" என்றேன். ஆனால் நான், "தேவனுடைய விசுவாச விருட்சமோ வரம்பற்றது. விஞ்ஞானமானது போக முடியும் வரை, நீர் விஞ்ஞானத்தை நம்புகிறீர், அதன்

பிறகு உம்மால் முடியாமல் போகும்போது - உம்மால் இனிமேலும் அதை விஞ்ஞானப் பூர்வமாக தேடிக் கண்டுபிடிக்க முடியாவிட் டால், அப்போது அதிலிருந்து விலகி வந்து (step off), அது முதற்கொண்டு விசுவாசிக்கத் தொடங்குகிறீர்கள். அந்தவிதமாகத்தான் நீங்கள் அதைச் செய்ய வேண்டியிருக்கிறது" என்று கூறினேன்.

14. தேவன் ஒருபோதும்... தேவன் உங்களிடம் வைத்திருக்கிற அன்பையும் இரக்கத்தையும் உங்களால் ஒருபோதும் பயன் படுத்தித் தீர்க்கமுடியாது. நீங்கள், "நல்லது, பிதாவே, உம்மை மிக அதிகமாக தொந்தரவு செய்வதை வெறுக்கிறேன்" என்று கூறலாம்.

அவ்விதமாக தொந்தரவு செய்யப்படவே அவர் விரும்புகிறார். அவர் அதை விரும்பு கிறார். உங்களால் எப்பொழுதாவது தேவ னிடம் மிக அதிகமாக கேட்க முடிந்தது என்று ஒருபோதும் எண்ணிவிடாதீர்கள். "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிற படியினால், உங்களுக்கு சித்திக்கிறதில்லை.

நீங்கள் விசுவாசியாத காரணத்தினால், நீங்கள் கேட்பதில்லை" என்று வேதவாக்கியம் கூறுகிறது என்று நம்புகிறேன்.

நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி, நாம் விண்ணப்பம் பண்ணி, விசுவாசிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நீங்கள் ஏராளமாக கேட்க வேண்டுமென்பது தான் அவருக்கு பிரியம். பெரிய காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ணுங்கள்; ஏதோவொரு சிறிய கடுகு விதைக்கு உங்கள் விசுவாசத்தை மட்டுப்படுத்த வேண்டாம் (don't limit). வேறு ஏதோவொரு விதமான விசுவாசத்தை நோக்கி இங்கே வெளியே தொடர்ந்து செல்லுங்கள், வெளியே பெரிய காரியங்களுக்குள் வாருங்கள். கேளுங்கள்... சிறிய காரியங்களைப் போலவே பெரிய காரியங்களையும் பெற்றுக் கொள்வது அவ்வளவு எளிதே. நீங்கள் வெறுமனே விசுவாசிக்க வேண்டும். அவ்வளவு தான். உங்களுக்கு விசுவாசம் உண்டு, அதை எவ்வாறு சரியாக பயன்படுத்துவது என்பதை அறிந்து கொள்ளுங்கள், அப்பொ

ழுது அதெல்லாம் சரியாக இருக்கும். உங்க ளால் அதை சரியாக கிரியை செய்ய வைக்க முடியும், அப்போது அது அருமையாக இருக்கும்.

15. உங்களுக்காக உள்ள தேவனுடைய அன்பையும், வல்லமையையும், உபகாரங் களைப் பெற்றுக்கொள்பவர்களையும் (beneficiaries) பயன்படுத்தித் தீர்ப்பதைக் குறித்து பேசுவதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா? இங்கே வெளியே சமுத்திரத்தின் நடுவில் இருக்கும், ஏறக் குறைய இவ்வளவு நீளமான ஒரு சின்னஞ் சிறிய மீனானது, "இப்பொழுது, சற்று பொறுங் கள். நான் இந்தக் காரியத்தை ஆலோசித்துப் பார்ப்பது நல்லது. நான் இந்தத் தண்ணீரை குறைவாக குடிப்பது நல்லது, ஏனென்றால் ஏதோவொரு நாளில் நான் முழுவதும் குடித்து தீர்த்து விடலாம்" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடி கிறதா. ஏறக்குறைய இவ்வளவு பெரிதான ஒரு சிறு மீன், இங்கே வெளியே இந்த சமுத்திரத்தின் நடுவில்...

நல்லது, அது எளிதாகச் செய்யப்பட முடியும், உங்களால் தேவனிடம் அதிகமாக வேண்டிக்கொள்ள முடிவதைக் காட்டிலும் அது இன்னும் மிக எளிதானது. அவர் வற்றாத ஜீவ நீரூற்றாக இருக்கிறார். உங்களுக்கு என்ன தேவையாயிருந்தாலும், அவரிடம் கேட்டு, அதை விசுவாசியுங்கள். அவர் கல்வாரியில் மரித்து, நீங்கள் பிரயா ணத்தில் இருக்கையில், உங்களுக்குத் தேவை யான எல்லாவற்றிற்காவும் ஒரு வாக்குத்தத் தத்தை உங்களுக்கு அருளின போது, அவர் அதை மீட்பின் ஆசீர்வாதங்களில் கொடுத்து விட்டார். நீங்கள் விண்ணப்பம் பண்ணி, அதை விசுவாசிப்பீர்களானால், அது உங்க ளுடையதாக இருக்கிறது. அது சரியே.

16. எகிப்தின் மகத்தான களஞ்சியங் களுக்கு கிழேயிருக்கும், ஏறக்குறைய அவ் வளவு நீளமான ஒரு சிறிய எலியானது, “இப்பொழுது, சற்று பொறுங்கள். நான் ஒரு நாளைக்கு வெறுமனே ஏறக்குறைய இரண்டு தானியங்களை தவிர வேறு சாப்பிடாமல் இருப்பது நல்லது, ஏனென்றால் குளிர்காலம்

முடியும் முன்பாகவே, நான் எல்லாவற்றையும் செலவழித்து தீர்த்து விடலாம்" என்று கூறிக்கொண்டிருப்பதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா.

அந்தவிதமாகத்தான் ஜனங்கள் கிறிஸ்தவர்களாக நடந்து கொள்கிறார்கள். ஒரு காலையில எழுந்து, "இன்று தேவன் என்னுடைய குடும்பத்தை ஆசீர்வதித்து, உம்மோடு எங்களை நெருக்கமாக வைத்திரும். ஆமென். நல்லது, நான் இந்த நாளுக்காக என்னுடைய மார்க்கத்தை செய்து முடித்து விட்டேன்" என்று கூறுகிறார்கள்.

ஓ, நான் உண்மையாகவே அப்படியே சாய்ந்து, அதில் பருக விரும்புகிறேன் (நீங்களும் அவ்வாறு விரும்பவில்லையா?), நன்றாக புசிக்கும் ஒரு உண்மையான ஆவிக்குரிய யூபிலியைக் கொண்டிருக்க விரும்புகிறேன், இனியும் உங்களால் பருக முடியாமல் போகும் மட்டுமாக அப்படியே பருகுங்கள்.

17. நீங்கள் எல்லாரும் இங்கே வெளியே கல்போர்னியாவில் கனிகளை விளைவிப்ப வர்களில் மகத்தானவர்களாக இருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியும்... நீங்கள் ஆரஞ்சு மரங்களை வளர்க்கிறீர்கள். அந்தச் சிறு ஆரஞ்சு மரமானது ஏறக்குறைய அரை அங்குல உயரம் இருக்கும் போதே, நீங்கள் எப்பொழுதாவது அதிலிருந்து பறிக்கும் ஒவ்வொரு மரக்கால் ஆரஞ்சு பழங்களும் சரியாக அப்போதே அந்த மரத்தின் மேல் அல்லது அந்த மரத்திற்குள் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு அது தெரியுமா?

அது அவ்வாறு இல்லை என்றால், அது எங்கிருந்து வந்தது? எங்கே... அதன்மேல் ஆரஞ்சு பழங்களை வைக்கிறது யார்? அது மரத்தில் உள்ளது. அந்தச் சிறு மரத்தோடு நீங்கள் செய்வது எல்லாம், நீங்கள் வெறு மனே அதை நடுவது தான். அதன்பிறகு நீங்கள் அதற்கு தண்ணீர் கொடுத்தாக வேண் டும். அது அப்படியே குடித்து, அதற்காக ஒதுக்கப்பட்ட வீதத்தை விட இன்னும்

அதிகமாக அது குடிக்க வேண்டியிருக்கிறது. அது இன்னும் அதிகமாக குடிக்கிற போது, அது வெளியே நீட்டிக்கொண்டு வரத் துவங்குகிறது. அது இலைகளைப் பரப்பி, கிளைகளை விட்டு, மலர்களை பூக்கும்படி செய்து, பிறகு ஆரஞ்சு பழங்களை விளைவிக்கிறது. அப்போது அது தொடர்ந்து பருக, இன்னும் அதிகமான ஆரஞ்சு பழங்களையும், இலைகளையும், மலர்களையும் வெளியே தள்ளிக் கொண்டேயிருக்கிறது; அப்படியே பருகி, பருகி, பருகி, பருகிக் கொண்டேயிருக்கிறது.

18. ஒரு விசுவாசி கிறிஸ்து இயேசுவுக்குள் பொருத்தப்பட்டபோது, நீங்கள் அங்கே உள்ளே வற்றாத ஜீவ நீரூற்றில் நடப்பட்டு விட்டீர்கள், நீங்கள் இன்னும அதிகமாக குடிக்கிற போது, இன்னும் அதிகமாக பெரிய அளவில் கனிகொடுத்துக்கொண்டே (push out) இருக்கிறீர்கள். அது சரியே. உங்களால் விசுவாசிக்க முடியாவிட்டால்... "நல்லது, இயேசு என்னை இரட்சித்தார் என்று விசுவாசிக்கிறேன்." அது நல்லது தான். அப்படியானால் பரிசுத்த ஆவியைக் குறித்து என்ன?

அவர் உங்களுக்கு பரிசுத்த ஆவியை அருளுவார் என்று விசுவாசியுங்கள்; அவர் அதை உங்களுக்கு வாக்குப்பண்ணியுள்ளார். தெய்வீக சுகமளித்தலைக் குறித்து என்ன, அதை விசுவாசியுங்கள்; அவர் அதை உங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். ஒவ்வொரு மீட்பின் ஆசீர்வாதங்களும் உங்களுக்குச் சொந்தமானது; அப்படியே பருகி, பருகி, கனிகொடுத்துக்கொண்டே இருங்கள் (push out). அவ்வளவு தான். உங்களுக்குத் தேவையான எல்லாமே சரியாக உங்களுக்குள்ளே தான் இருக்கிறது.

நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும் போது, இங்கே மற்றும் மகிமைக்கு இடையே உங்களுக்குத் தேவையான எல்லாமே சரியாக அப்பொழுதே உங்களுக்குள் இருக்கிறது. உங்களுக்கு தேவையானது விசுவாசம் அல்ல. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பீர்களானால், நீங்கள் விசுவாசத்தைப் பெற்று விட்டீர்கள், அவரே உங்கள் விசுவாசமாக இருக்கிறார். ஆனால் நீங்கள் அறிய வேண்டிய காரியம் என்ன

வென்றால், அந்த விசுவாசத்தை எவ்வாறு உபயோகிப்பது என்பது தான். நான் என்ன கூற வருகிறேன் என்று புரிகிறதா? அதை எவ்வாறு உபயோகிப்பது என்பதை நீங்கள் புரிந்து விட்டால், வரவிருக்கிற இந்த வாரத் தில் அதை விளக்கிக் கூற முயற்சிப்போம். அப்போது உங்களால் காணக்கூடிய அல்லது-அல்லது கர்த்தரைக் குறித்து உங்களால் நினைத்துப் பார்க்கக் கூடிய எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் அதிகமாயும், ஏராளமாகவும் நீங்கள் காண்பீர்கள்.

***செய்தி:*** பெந்தெகோஸ்தே எங்கே தோல்வியடைந்தது என்று நான் எண்ணுவது, நவம்பர் 11, 1955

★★★★★

எங்கள் பரலோகப் பிதாவே, ஜெபத்தின் வழியில் உம்மிடம் வரும்படியான சிலாக்கி யத்திற்காகவும், விசுவாசிப்பதற்காகவும், நாங்கள் எதைக் கேட்டாலும் நீர் (அதைக்) கனப்படுத்துவீர் என்ற ஒரு விசுவாசத்தைக் கொண்டிருப்பதற்காகவும், நாங்கள் இன்று

உமக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். ஏனென்றால், நாங்கள் வேண்டிக்கொள்வதின் நிமித்தமாக அல்ல, ஆனால் "கேளுங்கள்; அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறபடியினால் உங்களுக்குச் சித்திக்கிறதில்லை, நீங்கள் விசுவாசியாதபடியால் நீங்கள் கேட்பதில்லை" என்று நீர் கூறியிருப்பதற்கு நாங்கள் கீழ்ப்படி கிறதின் நிமித்தமாகத்தான். மேலும், பிதாவே, நாங்கள் உம்மிடம் விண்ணப்பம் செய்ய விரும்புகிறோம், ஏனென்றால் நாங்கள் கேட்டுக்கொண்டதைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசிக்கிறோம்.

மேலும் பிதாவே, முதலாவது காரியம் என்னவென்றால், எங்களுடைய சொந்த பாவங்களுக்காவும், இந்த சபையாரின் பாவங்களுக்காகவும், இந்தக் காலையில் விண்ணப்பம் பண்ணுகிறேன், கீழ்ப்படியா மையின் பாவங்கள் எல்லாவற்றிற்காகவும், அசட்டை செய்யும் பாவங்களுக்காகவும், அது எங்கேயிருந்தாலும், நான் அவைக ளுக்காக தாழ்மையுடன் மன்னிப்பைக் கோரு

கிறேன். தேவனே, நீர் இப்பொழுதே எல்லா அக்கிரமங்களிலிருந்தும், எல்லா பாவங்களிலிருந்தும், மீறுதல்களிலிருந்தும் எங்கள் இருதயங்களையும் ஆத்துமாக்களையும் சுத்திகரிக்க வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் உம்மை சேவிக்கும்படியாக, பரிசுத்த ஆவியானவர் தாமே ஒரு சரியான விதமான இருயத்தையும் சிந்தையையும் எங்களுக்குள் புதுப்பிப்பாராக. இதை அருளும், பிதாவே.

வியாதியோடும் துன்பத்தோடும் இருக்கிற யாவரையும் வார்த்தையின் மூலமாக நீர் சுகப்படுத்த வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம். "விசுவாசம் கேள்வியால் வருகிறது, தேவனுடைய வார்த்தையைக் கேட்பதன் மூலமாக வருகிறது." பரிசுத்த ஆவியானவர் தாமே உள்ளே பிரவேசித்து - வார்த்தையைப் பற்றிப்பிடித்து, அதைச் சரியாக புதியதும், புதுமலர்ச்சியோடும், சுத்தமுமாயிருக்கிற அந்த இருதயங்களுக்குள் கொண்டு சென்று, அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் பிரசன்னத்தில் இருந்து, தங்கள்

சுகத்தையும், அவர்கள் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிற ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அவர்களை உயரமாகக் கொண்டு சென்று, பாதையின் மேலே உயர கொண்டு செல்லும் மகத்தான விசுவாசத்தோடு கூட அங்கே அதை நடுவாராக. அதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம், உம்மிடம் ஜெபிக்கவும், உம்மிடம் விண்ணப்பம் செய்யவும், சுத்தி ரிக்கப்படவும், துடைத்து சுத்தம் செய்யப் படவும், சுகமடையவும், மீண்டும் சேவைக் குள் திரும்ப வைக்கப்படவும், கர்த்தாவே, நீர் எங்களுக்கு அனுப்பியிருக்கிற ஒவ்வொரு சிறு மூலைமுடுக்குகளிலும் உம்மை சேவிக் கும்படியாகத்தான். நாங்கள் தேவ குமார னாகிய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இதைக் கேட்கிறோம். ஆமென்.

***செய்தி:*** வெளிப்படுத்தின விசேஷம், அடையாளங்களின் புஸ்தகம், ஜூன் 17, 1956

★★★★★

16. கர்த்தாவே, நாங்கள் வந்து, ஜீவனுள்ள தேவனிடம் எங்கள் தலைகளைத் தாழ்த்தி, தம்முடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், நாங்கள் பிதாவிடம் வேண்டிக்கொண்டால், நாங்கள் கேட்பதைக் கொண்டிருக்க முடியும் என்று அவருடைய பரிசுத்த குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் மூலமாக, எங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார் என்பதை அறிந்து கொள்ளும்படியான தருணத்திற்காக நினைப்பதற்கும் மேலாக நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். நாங்கள் இயேசுவின் நாமத்தில் வருவோமானால், நாங்கள் அவரோடு கூட ஒரு சந்திப்பை அல்லது கேட்கும் ஏதோவொன்றை (audition) நாங்கள் உடையவர்களாய் இருப்போம் என்ற உறுதியைக் கொண்டிருக்கிறோம், "என் நாமத்தினாலே பிதாவிடம் எதையும் கேளுங்கள், அப்பொழுது அவர் அதை அருளுவார்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

17. அவர் எங்களைக் கேட்கிறார் என்றும், நாங்கள் வேண்டிக்கொள்வதை அருளு

வார் என்றும் நாங்கள் இன்றிரவு முற்றிலும் நிச்சயம் உள்ளவர்களாயிருக்கிறோம், ஏனென் றால் நாங்கள் வேண்டிக்கொள்வது தேவனு டைய சித்தமாக இருக்கிறது என்பதை நாங்கள் உணருகிறோம். ஒரு குறிப்பிட்ட இடத்தில், அவர், “நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறபடியினால், உங்களுக்குச் சித்திக்கிறதில்லை, நீங்கள் விசுவாசியாதபடி யினால் நீங்கள் கேட்பதில்லை” என்று சொல்லியிருக்கிறார். கர்த்தாவே, நாங்கள் வருகிறதற்கு காரணம் என்னவென்றால், நாங்கள் விசுவாசிக்கிறதின் நிமித்தமாகத்தான். எங்கள்-எங்களுடைய ஜெபங்கள் வெறுமனே மனிதரால் கேட்கப்பட வேண்டுமென்பதல்ல, ஆனால் நீர் கேட்டுக் கொண்டிருக்கிறீர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம், நீர் எங்க ளுக்கு பதிலளிப்பீர் என்ற நிச்சயமுடைய வர்களாயும் இருக்கிறோம், ஏனென்றால் நீர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீர். உமது சித்தம் மாத்திரமே செய்யப்பட வேண்டு மென்று நாங்கள் கேட்கிறோம்.

***செய்தி:*** கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்தறிதல், ஆகஸ்டு 12, 1959

★★★★★

55. இப்பொழுது, நாம் எவ்வாறு நடப்பட்டோம்? நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் நடப்படுகிறோம். இப்பொழுது, அவரைக் குறித்துள்ள என்னுடைய மதிப்பீட்டில், நான் விசுவாசிக்கிறேன். உங்களால் அவருடைய நன்மைகளை முழுவதும் பயன்படுத்தித் தீர்க்க முடியாத, வற்றாத ஜீவ நீரூற்றாக அவர் இருக்கிறார். சில ஜனங்கள், "ஓ, நான் தேவனை நோக்கி அதிகமாக கூப்பிடுவதை வெறுக்கிறேன்" என்று நினைக்கிறார்கள். நீங்கள் அதைத்தான் செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

"நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறபடியினால், உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. நீங்கள் விசுவாசியாதபடியால், நீங்கள் கேட்பதில்லை. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி மிகுதியாகக் கேளுங்கள்." அதைத் தான் தேவன் விரும்புகிறார்:

பெரிய காரியங்களைக் கேளுங்கள். நான் இந்தக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆத்து மாக்களுக்காக கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த வாசலில் பிரவேசிக்கிற வியாதிப்பட்ட ஒவ்வொரு நபரும் சுகமடைந்தவர்களாக இங்கிருந்து போக வேண்டுமென்று நான் வேண்டிக் கொண்டேயிருக்கிறேன். நான் அதை விசுவாசித்துக் கொண்டிருக்கிறேன். நாங்கள் போவது மட்டுமாக, இது ஒன்றாக இருக்கும் வேறொரு கூட்டமாக இருக்காது என்றும், ஆனால் இது இங்கே யாக்கிமாவில் ஒரு எழுப்புதலாக இருக்கும் என்றும் நான் விசுவாசித்துக் கொண்டேயிருக்கிறேன். நான் போதுமான காலம் இங்கேயிருந்து வெளியே யிருக்கும்படி சாத்தான் வைத்திருந்தான், ஒவ்வொரு சபையிலும் தேசத்தைச் சுற்றிலும் ஒரு உண்மையான வீசியடித்துச் செல்லும் எழுப்புதலுக்கான மணிவேளை இங்கே யிருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

***செய்தி:*** எல்லா அவிசுவாசத்தையும் ஜெயங்கொள்ள அவசியமாயிருப்பது என்ன: நம்முடைய விசுவாசம்

★★★★★

38. ஓ, நீங்கள் எப்படியிருக்கிறீர்களோ, அப்படித்தான் உங்கள் குடும்பமும் இருக்கும். நீங்கள் உங்களுடைய பிள்ளையை ஒரு குறிப்பிட்ட சூழலில் வளர்க்கிறீர்கள்; நீங்கள் அதைத் தவறான விதமாக வளர்ப்பீர்களானால், அது தவறான வழியில் செல்வதற்கு உள்ள வாய்ப்பைக் காட்டிலும் சரியான வழியில் செல்ல தொண்ணூற்றெட்டு சதவிகிதம் அதிக வாய்ப்புள்ளது. "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை வளர்த்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." அவர்களை சரியான வழியில் வளர்த்துங்கள். உங்கள் பிள்ளைகள் பள்ளியில் இருக்கும் போதும் கூட, சரியானதைச் செய்யவும், நேர்மையாக இருக்கும்படியும், உண்மையாகவும் நேர்மையாக இருக்கும்படியும் உங்கள் பிள்ளைகளுக்குப் போதியுங்கள்.

39. இப்பொழுது, அநேக சமயங்களில் பிள்ளைகளுக்கு பரீட்சையில் மற்றவர்களைப் பார்த்து காப்பி அடிக்க வேண்டும் என்னும்

எண்ணம் உண்டாகின்றது. இப்படியாக பள்ளிப்படிப்பை முடிக்க அவர்கள் பிரயா சப்படுகின்றனர். ஆனால் நீங்கள் சொந்தமாக பரீட்சை எழுதி அதை முடித்தால், நீங்கள் நல்ல மார்க்குகள் வாங்கினதைக் குறித்து மகிழ்ச்சியடையலாம்.

40. உங்களுக்குத் தெரியும், நாளைக்கு உங்களுக்கு பரீட்சை இருக்குமானால் இராத்திரி முழுவதும் படிக்காமல் அலைந்து, அடுத்த நாள் காலை எழுந்திருந்து, "நான் இன்னார் இன்னார் பக்கத்தில் உட்கார்ந்து கொள்வேன். அவர்கள் கெட்டிக்காரர்கள். அவர்களை பார்த்து காப்பி அடித்திடுவேன்" என்று கூறுவது நல்லதல்ல. காலை உணவு அருந்தும் போது அப்பா ஜெபம் செய்யும் நேரத்தில் நீங்கள் அவரிடம், "அப்பா, இன்று எனக்காக ஜெபியுங்கள். எனக்கு வேதியியல் பரீட்சை உள்ளது" என்று கூறிடுங்கள். அல்லது அது எதுவாயிருந்தாலும் சரி.

அப்பொழுது நீங்கள், அப்பாவாகிய நீங்கள் ஜெபம் செய்யும்போது, "தேவனே,

இன்றைய பரீட்சையில் ஜான், மேரி இவர்களை ஆசீர்வதியும் என்கிறீர்கள்". நான் சொல்லுகிறேன், அது போக்கையே மாற்றி விடும்.

41. ஞாபகம் கொள்ளுங்கள், நாம் விசுவாசத்தோடு கேட்போமானால், நாம் கேட்டதைப் பெற்றுக் கொள்வோம். இயேசு, விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். நீங்கள் கேட்காததினால் பெற்றுக் கொள்வதில்லை. நீங்கள் விசுவாசிக்காததனால் கேட்பதில்லை. கேளுங்கள், "அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்" என்றார். அது எனக்குப் பிரியம்.

42. நமது சரியான போதனை: நீங்கள் சரியான காரியத்தை சொல்லுங்கள், சரியான காரியத்தை செய்யுங்கள், சரியான காரியத்தை சிந்தியுங்கள், எப்பொழுதுமே சரியானதை சிந்தியுங்கள். எனக்கு ஒரு சிறு சுலோகம் உண்டு: சரியானதை செய், அது நீ தேவனுக்கு செய்ய வேண்டிய கடமை. சரியான விதமாக சிந்தி, அது உனக்கு உன்

மேல் உள்ள கடமை. அப்பொழுது எல்லாம் உனக்கு சரியாக நடந்தே தீர வேண்டும்.

43. நீங்கள் ஒரே நேரத்தில் கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் செல்ல முடியாது. அவ்வாறே நீங்கள் ஒரே நேரத்தில் சரியானதையும் தவறானதையும் செய்ய முடியாது. நீங்கள் எவ்வளவு தான் ஒரு திசையை நோக்கி செல்வதாக நினைத்தாலும், நீங்கள் மேற்கு நோக்கி செல்லாமல் போனால்... நீங்கள் மேற்கு நோக்கி சென்றால் கிழக்கு நோக்கி செல்லவில்லை.

***செய்தி:*** வேறொருவரால் விளையும் பாதிப்பு, அக்டோபர் 13, 1962

★★★★★

195. அவர்கள் இந்த வரிசையினூடாக கடந்து சென்று, நாங்கள் எங்கள் கரங்களை அவர்கள்மேல் வைக்கையில், இது மனிதன் மூலமாகப் போவதல்ல என்றும், ஆனால் தேவனும் மனிதனும் ஒன்றாக இருப்பது என்றும் அடையாளம் கண்டுகொள்வார்களாக. தேவன் மனிதனுக்குள் வந்திருக்கிறார்,

மனிதனிடமிருந்தே தவிர தேவன் எதையுமே செய்வதில்லை. அதைத் தான் அவர் செய்கிறார். அவருடைய கிரியைகள் மனிதன் மூலமாக இருக்கின்றன. அவர் மனிதனை தன்னுடைய கூட்டாளியாக உண்டாக்கினார்.

இயேசு நின்று, அறுவடையை நோக்கின போது, அவர், "அறுவடை விளைந்து முதிர்ந்து விட்டது, வேலையாட்களோ கொஞ்சம்; அறுவடையின் ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார். அவரே அறுவடையின் ஆண்டவராக இருக்கிறார். வேறு வார்த்தைகளில் (சொன்னால்), "செய்யும்படி எது சரியென்று நான் அறிந்ததைச் செய்யும்படியாக என்னிடம் வேண்டிக்கொள்ளுங்கள்" என்பது.

197. ஆனால் அவர் தமது சீஷர்களோடு கூட தம்மை சம்பந்தப்படுத்திக் கொண்டார். வேண்டிக்கொள்ளும்படியாக அவர்கள் ஒன்றாகவே இருந்தார்கள். அவர், "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிற காரணத்தினால், உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. நீங்

கள் விசுவாசியாததபடியால், நீங்கள் வேண்டிக் கொள்வதில்லை" என்றார். ஆனால், பிதாவே, நாங்கள் விசுவாசிக்கிறோம், இன்றிரவு மறுபடியும் எங்களோடு இருக்கும் உமது இரக்கத்திற்காக வேண்டிக்கொள்ளுகிறோம். இயேசுவின் நாமத்தில். ஆமென்.

***செய்தி:*** போய், இயேசுவை எழுப்புங்கள், நவம்பர் 30, 1963 மாலை

★★★★★

98. இப்பொழுது உங்களுடைய சகேயுவால் இளைப்பாற முடியாமல் இருப்பதை நீங்கள் காணப் போகும்போது, அப்படியே, "கர்த்தாவே, உமக்கு நன்றி, இப்பொழுது நீர் அவர்மேல் கிரியை செய்து கொண்டிருக்கிறீர்" என்று கூறுகிறீர்கள். அவன் மிகவும் எளிதில் கோபம் கொண்டு, இனிமேல் நீங்கள் சபைக்குப் போவதை அவன் விரும்பாமல், பாருங்கள், "அந்தக் கூட்டத்திடமிருந்து விலகியிரு! இனிமேல் அங்கே போகாதே!" என்று இருப்பதை நீங்கள் காணும்போது. அப்படியே பொறுமையாக இருந்து விடுங்

கள். அந்தவிதமாகத்தான் அவர் அதைச் செய்கிறார். அவன் மிகவும் அமைதியற்ற வனாக ஆகிறான், அவனால் அதில் நிற்க முடியாது.

99. எனவே நாம் கண்டுகொள்கிறோம், அடுத்த நாள் காலையில், மிகவும் அதி காலமே, நம்முடைய சிறு கதாபாத்திரம் படுக்கையை விட்டு யாரும் கவனிக்காதபடி ரகசியமாக நழுவிச் சென்று, தன்னுடைய மிகச் சிறந்த ஆடைகளை அணிந்துகொள் கிறான், உங்களுக்குத் தெரியும், அவனிடம் இருந்த மிக அருமையான அலங்காரமான அங்கியை உடுத்திக்கொள்கிறான், அவனு டைய தாடியை நேர்த்தியாக கத்தரித்து, தன்னுடைய தலைமயிரை வாருகிறான். ரெபேக்காள் போர்வையின் கீழிருந்து நோக் கிப்பார்த்து, அவனைக் காண்கிறாள். ஏதோ வொன்று மேலே இருப்பதை அவள் சரியாக அப்பொழுதே அறிந்து கொள்கிறாள். எனவே அவன் ஜன்னலை நோக்கி நழுவிச் சென்று, கூர்ந்து கவனித்து, அவள் பார்க்கிறாளா, அவள் தூக்கத்தை விட்டு விழித்துக்கொண்டு

விட்டாளா என்று பார்க்கிறான். அவனுடைய நினைப்பின்படி, அவள் விழிக்கவில்லை தான். அவன் திரையை மேலே உயர்த்தி, வெளியே நோக்குகிறான், அது பொழுது புலரும் நேரமாக (breaking day) இருந்தது, எனவே அவன் தன்னை முழுவதும் ஆயத்தப்படுத்திக் கொள்கிறான்.

100. நீங்கள் பாருங்கள், நீங்கள் யாரோ ஒருவருக்காக ஜெபிக்கப் போகும் போது, ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது. அங்கேதான் நாம் தோல்வியடைகிறோம், நண்பர்களே, ஜெபிக்காமல் இருத்தல். ஜெபம் என்பது தான் பேச்சின் முக்கிய கருத்தாக (keynote) உள்ளது. "கேளுங்கள், அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறபடியினால், உங்களுக்குச் சித்திக்கிறதில்லை; நீங்கள் விசுவாசியாதபடியால் நீங்கள் கேட்பதில்லை. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி மிகுதியாக கேளுங்கள். நீங்கள் கேட்டு, நீங்கள் வேண்டிக்கொண்டதைப் பெற்றுக் கொள்வீர்கள் என்று விசுவாசியுங்கள்." அதன்

பிறகு அதைப் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். அதை விட்டு விடாதீர்கள். அது வேதாகமத்திலுள்ள ஒரு வாக்குத்தத்தமாக இருந்து, தேவன் அதை உங்களுக்குக் கொடுக்கப் போகிறார் என்று வெளிப்பட்டிருக்குமானால், அதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

101. அந்தவிதமாகத்தான் அவள்-அவள் கொண்டிருந்தாள். சகேயு இரட்சிக்கப்படப் போகிறான் என்பது அவளுக்கு வெளிப்பட்டிருந்தது, எனவே அவள் அதைச் சரியாகப் பற்றிப்பிடித்துக்கொண்டாள்.

***செய்தி:*** இயேசு என்பவர் யார்?,
ஜூன் 20, 1964

★★★★★

9. நேற்று மாலை நிறைய, தொலைபேசி அழைப்புகள் வந்து கொண்டிருந்ததை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இப்பொழுது நான் உங்கள் அண்டை வீட்டான். நான் டூசானில் இப்பொழுது வசிக்கிறேன். நிறைய அழைப்புகள் வந்த காரணத்தால்,

எல்லோரையும் சென்று காணமுடியவில்லை. எனவே அவர்களுக்கு தொலைபேசியின் வழியாகவே ஜெபித்தேன். ஆகையால் அவர்கள் தங்கள் தொலைபேசி எண்களை கொடுக்க வேண்டியதாயிருந்தது.

10. எண்பத்தேழு வயதான ஒரு கிறிஸ் தவ பெண்மணி சிறிது காலமாக மனநலம் இல்லாதவர்களாக இருந்து வந்தார்கள். அவர்கள் தெருவில், தன் குழந்தையை யாரோ கொண்டு போய் விட்டதாக கூச்ச லிட்டு, காவற்காரரை கூப்பிட்டுக் கொண் டிருந்தார்கள். எண்பத்தேழு வயது, பாருங் கள், அவர்களுக்கு மனக்கோளாறு ஏற்பட் டிருந்தது. அவர்கள் அருமையான வயோதிப அம்மாள். அவர்களை என் வாழ்க்கையில் நான் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. பில்லி என்னை தொலைபேசியில் கூப்பிட்டு, “நீங்கள் உடனே அவர்களுக்காக ஜெபியுங் கள். அவர்கள் மிகவும் நோயுற்றிருக்கி றார்கள். அந்தப் பெண்மணி மரிக்க போகிறாள் என்று அவர்கள் நினைக்கிறார்கள்,

அவளுக்கு... அவளுக்கு பைத்தியம் பிடித் துள்ளது" என்றான்.

11. அப்பொழுது நான் தொலைபேசியை வைத்து விட்டு அறைக்குள் சென்று ஜெபித்தேன். சில நிமிடங்களுக்குள் அந்த அம்மாள் நன்றாக உறங்கினார்கள். அவர்கள் சுகமடைந்தவர்களாக உறக்கத்தினின்று எழுந்து, இரவு உணவுக்கு கோழியும் அதன்பின்னர் ஐஸ் கீரிமையும், இனிப்பு ரொட்டியும் தின்றார்கள். ஆம்.

12. நீங்கள் பாருங்கள், தேவன் இராஜா திபத்தியமுள்ளவர். அவர் அவ்வளவு தத்ரூ பமானவர், அவரால்.. நீங்கள் அங்கிருக்க வேண்டுமென்றில்லை. நீங்கள் அவரிடத்தில் அப்படியேக் கேளுங்கள்.

13. இன்று காலை இங்குள்ள நமது தலைவர், அல்லது வேறு யாரோ, ஒருக்கால் சகோதரன் வால்டெஸ் அவர்களாய் இருக்க லாம் என்று நான் நினைக்கிறேன். அவர் தமது ஜெபத்தில் "நாம் கேட்காததனால் பெற்

றுக் கொள்வதில்லை. நாம் விசுவாசிக்காத தினால் கேட்பதில்லை” என்று கூறினார்.

***செய்தி:*** அறுப்பின் நேரம், டிசம்பர் 12, 1964

★★★★★

20. அவர்கள் யோர்தானுக்குச் சென்று, அதைக் கடந்தனர். எலியா, “இப்பொழுது, நான் உனக்குச் செய்யவேண்டியது என்ன?” என்று கேட்டான்.

அவன், “உம்மிடத்திலுள்ள ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கும்படி வேண்டுகிறேன்” என்றான். செய்வதற்கென அவனுக்கு ஒரு வேலை உண்டென்று அவன் அறிந்திருந்தான். அவன், “இரட்டிப்பான பங்கு வேண்டும்” என்றான், வெறுமனே ஒரு நல்ல வெதுவெதுப்பான அனுபவம் அல்ல, வெறுமனே ஒரு நல்ல கைகுலுக்குதல் அல்ல, அல்லது எஞ்சியுள்ள சபைகளுடன் ஒரு நல்ல ஐக்கியம் அல்ல; ஆனால் நான் இப்பொழுது இருப்பதிலேயே மிகச் சிறந்த இரட்டிப்பான பங்கைத் தான் விரும்புகிறேன்.

தேவன் ஒரு மனிதனை உலகத்தின் கடினமான பொறுப்பில் நியமிக்கும்போது, உலகம் பெற்றிருப்பதைக் காட்டிலும் மிகச் சிறந்த ஒன்றை அவன் கொண்டிருக்க வேண் டியதாயுள்ளது என நான் உங்களுக்குக் கூறட்டும். சபை பெற்றிருப்பதைக் காட்டிலும் மிகச்சிறந்த ஏதோவொன்றை அவன் கொண் டிருக்க வேண்டியதாயுள்ளது. அவன் இரட் டிப்பான பங்கைப் பெற்றுக் கொள்ள செல்ல வேண்டியதாயுள்ளது. இரட்டிப்பான பங்கு தேவையான ஒரு வேளை எப்பொழுதாவது இருக்குமானால், அது இன்று தான். ஜனங்களின் மண்டலங்களில் (realms) அது தேவையாயுள்ளது. ஏதோவொரு சிறந்தது, ஏதோவொரு உயர்வானது... நான்...?... பெரும் பயறும், மக்காச்சோள ரொட்டியும் மிகவும் நன்றாக இருக்குமென நான் எண்ணுகிறேன். ஆனால் சிலசமயங்களில் நான் கொஞ்சம் உயர்ந்த நிலையை அடைய வேண்டியுள்ளது. நாமும் அதை செய்கிறோம். நாம் அதை செய்ய வேண்டியவர்களாயுள்ளோம். நாம் உயர்ந்த நிலையிலேயே தொடர்ந்து நிலைத்

திருக்க வேண்டும். இஸ்ரவேலர் தொடர்ந்து ஒரே இடத்திலேயே தங்கி இருந்ததால், அவர்கள் பின்மாற்றமடைந்தனர். அவன் தொடர்ந்து முன்னோக்கி அல்லது பின் னோக்கி செல்ல வேண்டியதாயிருந்தது. அது தான் சபையின் வழியாய் உள்ளது.

***செய்தி:*** பயன்படுத்தப்பட்ட ஓர் சால்வை, நவம்பர் 25, 1956, காலை

★★★★★

20. எலியா அதைத் தாண்டிச் சென்ற பிறகு, மறுபக்கத்திற்கு சென்று, அவன் வாலிப தீர்க்கதரிசியிடம் கூறினான்... இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் கிறிஸ்துவையும் சபையையும் பரிபூரணமாக சித்தரிக்கிறார்கள். எலியா சபையிடம் அதிகாரத்தை விட்டு விட்டுப் போகிறான், அது சபையிடம் அதிகாரத்தை விட்டுச் சென்றிருக்கும் கிறிஸ்துவின் ஒரு மாதிரியாக இருந்தது. ஆனால் சபையானது லூத்தரின் காலத்தின் வழியாகவும், மெதோடிஸ்டு காலம் வழியாக வும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின்

வழியாகவும் வந்து, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் சுயத்திற்கு மரிக்கவும் வேண்டியதாயிருந்தது.

இப்பொழுது, அவர்கள் யோர்தானைக் கடந்து விட்டனர். அவர்கள் மேலே மலைக் குப் போய்க் கொண்டிருக்கின்றனர். எலிசா சுற்றிலும் திரும்பி, "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? நீ பொறுமையாக என்னை ஒவ்வொரு இடத்திலிருந்தும் பின்பற்றி வந்து கொண்டிருக்கிறதைக் காண் கிறேன், திரும்பிச் செல்லவில்லை. நீ தொடர்ந்து வர வேண்டுமென்று முடிவு செய்து விட்டாயா?" என்றான்.

எலிசா, "உம்முடைய ஆவி என்மேல் கட்டாயம் இரண்டு மடங்காக வர வேண்டும்" என்றான். அவ்விதமாகத்தான் கேட்க வேண் டும். பாருங்கள்? அதிகமாகக் கேளுங்கள். எனவே தேவன் அதை அந்தவிதமாகத்தான் கொடுக்க விரும்புகிறார். அப்படியே கொஞ் சம்... தொல்லை... ஜனங்கள் சொல்லுகிறார்கள், "நான்-நான் பிதாவிடம் அதிகமாகக் கேட்

கிறேன்...” என்று. ஓ, என்னே, அவரிடம் கேட்க பயப்படாதீர்கள்: உங்களால் கேட்க முடிந்த எல்லாவற்றையும் கேளுங்கள். பெற்றுக்கொள்ளும்படியாக நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசம் எவ்வளவோ அவ்வளவு அதிகமாக அவர் உங்களுக்குக் கொடுக்கப் பிரியப்படுகிறார். அவருடைய கையிருப்பு தீர்ந்து போகாது. தேவன் அதிகமான ஆசீர்வாதங்களைக் கொண்டிருக்கிறார்.

21. ஏறக்குறைய அவ்வளவு அளவிலான ஒரு சிறு மீன் வெளியே சமுத்திரத்தின் மத்தியில் இருந்து கொண்டு, “நான் இந்தத் தண்ணீரை சிக்கனமாக குடிப்பது நல்லது; ஒருநாளில் நான் இதைத் தீர்த்து விடப் போகிறேன்” என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? ஓ, என்னே... அது... ஏன், என்னே... தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்களுடன் ஒப்பிடத்தக்கது எதுவுமேயில்லை. எகிப்தின் மகத்தான களஞ்சியத்தின் அடியில் உள்ள ஒரு சிறு எலி, “நான் தினமும் கொஞ்சம் கோதுமை மணிகளை சாப்பிடு

வதே நல்லது, ஏனெனில் அது குளிர் காலத்தில் கட்டாயம் மீதியிருக்காது" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? ஏன், அது ஆயிரம் வருடங்கள் உயிரோடிருந்தாலும் அதை ஒருபோதும் சாப்பிட்டு (முடிக்க) முடியாது. நீங்கள் இங்கே பூமியில் 10 மில்லியன் வருடங்கள் ஜீவித்தாலும், தேவன் சேமித்து வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை உங்களை விட்டு (எடுத்து), அதை நீங்கள் பருகா திருக்கும்படி செய்ய அவரால் முடியாது. உங்களுக்காக விடப்பட்டுள்ள ஆசீர்வாதங் கள் இன்னும் அதிகமாக இருக்கும், அவர் வற்றாத ஜீவ நீரூற்றாக இருக்கிறார். நீங்கள் உங்களையே அவரில் நடும் போது, இந்த நீரூற்றின் மூலமாக, அது நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்தைப் போலிருக்கும். எவ்வளவு மகிமையானது. அவர் தம்முடைய ஆசீர்வாதங்களைத் தமது ஜனங்களிடமாக உந்தித்தள்ளிக் கொண்டு அவர்களுக்கு அபரி மிதமாக கொடுக்க எவ்வளவாய் விரும்பு கிறார்.

***செய்தி:*** தீர்க்கதரிசியாகிய எலிசா, ஜூலை 23, 1954

★★★★★

33. நாம் ஜெபிக்கையில், ஜெபத்தில் நினைவுகூரப்பட விரும்புகிற யாராகிலும் உண்டா? உங்கள் கரத்தை மேலே உயர்த்தி, "என்னை நினைவுகூரும், தேவனே" என்று கூறுங்கள். ஓ, அது நல்லது. தேவன் உங் களை ஆசீர்வதிப்பாராக. "நான் தேவனின் மூலமாக குறி இடப்பட விரும்புகிறேன். நான் அவருடைய அடிமையாக இருக்க விரும்பு கிறேன். இந்த உலகத்திலுள்ள எனது ஜீவியத்தின் வாஞ்சையான காரியங்கள் எல்லாமே சிலுவையில் அறையப்பட்டு, நான் ஒவ்வொரு நாளும் இயேசுவைப் போன்று இன்னும் அதிகமாக இருக்கும்படியாக, அவ்விதமாக இயேசுவோடு கூட அன்போடு இருக்க விரும்புகிறேன். மற்றவர்கள் என்னி டத்தில் இயேசுவைக் காணும் அளவுக்கு, நான் அவரைப் போன்று அதிகமாக இருக்க விரும்புகிறேன். அவ்விதமாகத்தான் என்னு

டைய ஜீவியம் மறைக்கப்பட விரும்புகி றேன்." அவ்வாறு இல்லாமல் தங்கள் கரங்களை உயர்த்தின மற்றவர்கள் அங்கே உண்டா? சுற்றிலுமுள்ள எல்லாரும், மேலே பால்கனியில் உள்ளவர்களும், தேவன் உங் களை ஆசீர்வதிப்பாராக. அது நல்லது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்பொ ழுது நாம் தாழ்மையோடு நம்முடைய தலை களைத் தாழ்த்தி ஜெபிப்போம். உங்களுக்கு என்ன தேவையாயிருந்தாலும், அப்படியே கேளுங்கள். "உங்கள் சந்தோஷம் நிறைவா யிருக்கும்படி மிகுதியாக கேளுங்கள். கேளுங்கள் அப்பொழுது நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்; தேடுங்கள் அப்பொழுது கண் டடைவீர்கள்; தட்டுங்கள்; அது உங்களுக்குத் திறக்கப்படும்."

***செய்தி:*** நம்முடைய ஜீவனுள்ள நாளெல்லாம், ஜூன் 12, 1959

★★★★★

172. நான் இன்னும் வேறொரு காரி யத்தை கூற விரும்புகிறேன். உங்களுக்கு

தெரியும், ஒரு குழந்தைக்கு ஒன்று தேவைப் படுமெனின் அழுவதைத் தவிர வேறு எந்த ஒரு வழியையும் விஞ்ஞானப்பூர்வமாக அவர்களால் எதையுமே கண்டுபிடிக்க முடிய வில்லை. அந்த குழந்தை உறும்பம்படிக்கு அதற்கு உங்களால் கற்பிக்க முடியாது என்று உங்களுக்கு தெரியும். அது வேக வேகமாக பேசவும் அக்குழந்தைக்கு அவர்களால் கற்று தர முடியாது. ஆனால் அது தனக்கு தேவைப்படுவதை பெற்றுக் கொள்ள என்ன செய்கிறது தெரியுமா? அது தேவனால் தனக்கு அருளப்பட்டிருக்கின்ற வழியை எடுத்துக் கொள்கின்றது. அது கூச்சலிட்டு அழுகின்றது, கால்களை உதைக்கின்றது, தனக்கு தேவையானதை பெற்றுக் கொள்ளும் வரைக்குமாக கூச்சலிடுகிறது. பாருங்கள்? அது சரியே. அதற்கு இருக்கின்ற ஒரே வழி, அதன் தேவையைப் பெற்றுக் கொள்ள அழுவதுதான். தேவனால் அருளப்பட்ட ஒரு வழியைக் காட்டிலும் அதை விட சிறந்த ஒரு வழியை அவர்களால் கண்டு பிடிக்க முடிய வில்லை. அது சரியே, அதை அப்படியே

விட்டு விடுங்கள். அந்த இயற்கையான காரியங்கள்....

173. நான் ஜெர்மனியில் சிறிது காலத் திற்கு முன்னர் தங்கினேன். ஒரு பெரிய மக்கள் கூட்டத்தினரிடமாக பேசிக் கொண் டிருந்தேன். அப்பொழுது நான் "ஜெர்மானி யர்களே உங்களுக்கு என்ன ஆயிற்று? உங்களுக்கு தெரியுமா, நான் தெருவில் வந்து கொண்டிருந்த போது, ஒரு நாய் குரைத்தது. அது ஆங்கிலத்தின் குரைத்தது" என்றேன். மேலும் நான், "சற்று நேரத்திற்கு முன்னர், ஒரு காரில் இருந்த தாய் தன் குழந்தையை அமைதிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந் தாள். அக்குழந்தை அழுது கொண்டிருந்தது, அது ஆங்கிலத்தில் அழுதது, என்றேன். நான் "நாம் ஏன் காரியங்களைக் குறித்து குழுப்ப முற்று தடுமாறிக் கொண்டிருக்கின்றோம்? பாருங்கள்? அவை எல்லாம் தேவனால் அருளப்பட்ட வழியில் சென்று கொண்டிருக் கின்றன. நாம் எல்லாருமே பாபேல் கோபு ரத்திலிருந்து வந்திருக்கிறோம். உங்களுக்கு புரிகின்றதா, நாம் எல்லாரும் குழப்பமுற்று

தடுமாறுகிறோம்" என்று கூறினேன். அது சரியே!

174. அது தேவன் அளித்துள்ள வழியே தன்னுடைய சிறந்த வழி என்று அறிந்திருக்கின்றது. ஒரு குழந்தை தனக்கு தேவையாயிருக்கின்றதை பெற்றுக்கொள்ள இருக்கின்ற வழி அழுவதே தவிர வேறு எந்த சிறந்த வழியும் அக்குழந்தைகளுக்கு தெரியாது. "மிக சத்தமாக அழுகின்ற குழந்தை தான் சிறப்பான கவனிப்பைப் பெறும்" என்று டாக்டர் பாஸ்வர்த் கூறுவது வழக்கம். அதற்கான வழி அதுவே ஆகும்.

175. தேவனுடைய பிள்ளைகளுக்கு அவ்விதம் தான். அதற்கும் இணையொத்தான ஒன்றை நான் உங்களுக்கு காண்பிக்க கூடும். ஒரு மனிதன் மேடையின் மேல் வருகிறான், தன் வாயில் தொடர்ந்து மெல்லும் பசையை, சிவிங்கம் (chewinggum) மென்று கொண்டு வருகின்றான் என்று வைத்துக் கொள்வோம். அவன் வந்து "பிதாவே, இன்றிரவு நான் இங்கே இருக்கிறேன் என்று உங்களுக்கு

தெரியும். நீர் எனக்கு பரிசுத்த ஆவியை கொடுக்க உமக்கு விருப்பமானால், சரி பரவாயில்லை. நான் இங்கே இருக்கிறேன். நீர் என்னை சுகமாக்க விரும்பினால். நான் இங்கே உட்கார்ந்திருக்கிறேன். ஆனால் உமக்கு அதை செய்ய விருப்பமில்லை என்றால், சரி தான், அதனால் பரவாயில்லை என்றால், என்ன, அதனால் பரவாயில்லை. கர்த்தாவே அது உம்முடைய சித்தம்" என்று கூறுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவர் வேதாகமத்தில் சித்தத்தை தெளிவாக இங்கே எழுதி வைத்துள்ளார். "இது உம்முடைய சித்தம் கர்த்தாவே." சரி சரியாக இங்கே, இது அவருடைய சித்தம் தான். "நான் அதை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது உமக்கு விருப்பமானால், நான் அதை பெற்றுக் கொள்ளட்டும். ஆனால், இருந்த போதிலும் உமக்கு விருப்பமில்லை என்றால், சரிதான், அதனால் பரவாயில்லை" என்பா யாகில் நீ அதை ஒருபோதும் பெற்றுக் கொள்ளவே மாட்டாய்.

176. அக்குழந்தைகளில் ஒன்று அழட்டும், பட்டி ராபின்சன் (Buddy Robinson) செய்தது போல, பட்டி ராபின்சன் சோள வயலின் நடுவில் நின்றார். தன் கோவேறு கழுதையைக் கட்டினார். பிறகு அவர் "கர்த்தாவே, நீர் எனக்கு பரிசுத்த ஆவியை அளிக்கவில்லை என்றால், நீர் திரும்ப வரும் போது இங்கே எலும்புகள் குவியல் கிடப்பதை நீர் காண்பீர். நான் அதைப் பெறும் வரைக்கும் இங்கேயே இருக்கப் போகிறேன்" என்று கூறினார். அதுதான் காரியத்தில் நிலைத்திருப்பதாகும்.

177. தேவன் எப்போதுமே தம்முடைய ஜனங்களுக்கு தம்முடைய விசுவாசிக்கின்ற பிள்ளைகளுக்கு பரிந்துரைப்பது என்னவென்றால், அவர்கள் எப்போதுமே தாம் அளித்துள்ள வழியில் செல்ல வேண்டும் என்பதேயாகும். அதுதான் தேவன் தம்முடைய பிள்ளை தாம் அளித்துள்ள வழியிலே செல்ல வேண்டும் என்பது அவருடைய உள் கருத்தாகும், அவர் பரிந்துரை செய்வதும் அதுவே ஆகும். உங்களுக்கு என்ன

தேவையோ அதற்காக நீங்கள் அழுது மன்றாடுங்கள். நீங்கள் மன்றாடி கேட்கத்தான் அவர் விரும்புகின்றார்.

178. பேதுரு தண்ணீரின் மேல் நடக்க புறப்பட்டு நடக்க ஆரம்பித்த போது, அவன் தான் சரியாகத் தான் சென்று கொண் டிருக்கிறேன் என்று நினைத்தான். "இதோ பார் நான் எவ்வளவு பெரிதான ஒன்றை செய்து கொண்டிருக்கிறேன். நான் எவ்வளவு பெரிய வன் பார்?" என்று நினைத்த மாத்திரத்தில் அவன் மூழ்க ஆரம்பித்தான். "ஓ, அது தோல்வியுற்றது என்று நான் யூகிக்கிறேன்" என்று அவன் கூறவில்லை. கீழே சென்றான், சிறு சிறு நீர் குமிழிகள், (bubbles, பப்பிள்ஸ்) மேலே வந்தன, எல்லாம் முடிந்து விட்டது என்பதா, பாருங்கள்? அப்படி இல்லை.

179. அவன் "ஆண்டவரே, என்னை இரட்சியும்" என்று கதறினான். ஆமென். அப்பொழுது அந்த நித்திய கரமானது கிழே இறங்கி அவனை தூக்கி நிறுத்தியது. ஏன் அப்படி? அவன் கதறி அழைத்தான்.

180. இது தான் சபையிடம் உள்ள பிரச்சனையாகும். நாம் அப்படியே அங்கே நீண்ட நேரம் தரித்திருப்பதில்லை. நாம் நீண்ட நேரத்திற்கு கதறி அழுவதில்லை. நாம் அதை அப்படியே பிடித்திருப்பதில்லை. ஒரு சிறு குழந்தைக்கு ஒன்று தேவைப்படுமானால், அது காலை உதைத்து கதறி அழும், முகம் சிவக்கும் அளவுக்கு அழும். நாமோ நம் முகத்தில் உள்ள அது அதை எப்படி அழைப்பது, அது என்ன?, ஆம் மஸ்காரா (கண் இமையில் உள்ள முடிக்கு தடவும் வண்ணச் சாயம் - தமிழாக்கியோன்) நாம் அழுதோமானால் நம் முகத்தில் உள்ள மஸ்காரா கலைந்துவிடும் என்று பயப்படு கிறோம். அந்த வர்ணம் முகத்திலிருந்து கலைந்துவிடும் என்று பயப்படுகிறோம். நீங்கள் தேவனிடமிருந்து ஒன்றை பெற வேண்டுமானால், எப்படியாயினும் அதை நீ எடுக்கத் தான் செய்வாய். ஆகவே, நீங்கள் அதைக் குறித்து கவலைப்பட வேண்டாம். நீங்கள் உங்கள் மயிரை கலைத்துக் கொள்வீர்கள், ஆனால் அது எந்த ஒரு

வித்தியாசத்தையும் உண்டாக்காது. இல்லை இல்லை ஐயா.

181. இப்பொழுது, நாம் ஏதோ ஒரு அறிவுப்பூர்வமான சொற்பொழிவைக் கொண்டு அவரிடமாக வர வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்ப்பதில்லை. நான் இரட் சிக்கப்பட முயற்சித்த போது நானும் அப்படியாக செய்ய முயற்சித்தேன் என்பதை நான் நினைவு கூறுகிறேன். நான் அவருக்கு ஒரு கடிதம் எழுதி அதனை காட்டில் வைக்க இருந்தேன். ஏனென்றால் அவர் காட்டிற்குள் வந்து என்னிடமாக கூறுவார் என்று அறிந்திருந்தேன், நான் என்னைக் குறித்து வெட்கப்படுகிறேன் என்று அவரிடம் கூறவும் இருந்தேன். ஆனால் அதைச் செய்ய எனக்கு விருப்பமில்லை. அப்பொழுது அங்கே நான் சென்று ஜெபிக்கலாம் என்று போனேன். நான் “சற்று பார்ப்போம், மக்கள் தங்கள் கரங்களை இப்படியாக வைத்ததை நான் ஒரு சமயம் படத்தில் இருந்ததை கண்டேன். திரு. இயேசு அவர்களே, நீர் மாத்திரம் ஒரு நிமிடம் இங்கே வர வேண்டும் என்று நான்

விரும்புகிறேன். நான் உம்மிடம் ஒரு நிமிடம் பேச விரும்புகிறேன் நீர் பேச நான் காத்திருக்கிறேன்" என்றேன். ஒன்றுமே வர வில்லை. "ஓ நான் தவறாக செய்து விட்டேன். சரி திரு இயேசு அவர்களே, ஒருக்கால் நான் இப்படியாக செய்ய வேண்டியவனாக இருக்கிறேன் போல. திரு இயேசு அவர்களே, நீர் வந்து எனக்கு உதவி செய்வீரா? நான் ஒரு பாவி. நான் உம்மிடம் பேச விரும்பு கிறேன்" என்று கூறினேன். எனக்கு… "தேவன் என்னிடம் பேசினார்" என்று மக்கள் கூறு வதை நான் கேட்டிருக்கிறேன். நான் "திரு. இயேசு அவர்களே, நீர் இங்கே வருவீரா? நான் உம்மிடம் பேச வேண்டும்" என்று கூறினேன்.

182. ஆனால், அப்பொழுது பிசாசு அங்கே காட்சியில் வந்தான். அந்த விதமாகத் தான் அவன் செய்வான். அவன் உன்னிட மாக, "உன் முழங்கால்கள் வலிக்கின்றதே, நீ கேட்க வேண்டிய அவசியம் இல்லை. பார், நீ சற்று பொறுத்திரு. நாளை இரவு அதைப்

பெற்றுக் கொள்" என்று கூற முயற்சிப்பான். நீங்கள் தயாராக இல்லையெனில் அப்பொழுது அவன் உங்களை சுற்றி சுற்றி வருவான். அப்பொழுது அவன் என்னிடமாக.. ஆனால் எப்பொழுதுமாக, அவன் கூறுவதை, அவன் கூறுவதை கொண்டு நீங்கள் ஒரு அனுகூலமான சூழ்நிலையை உங்களுக்கு உருவாக்கிக் கொள்ளுங்கள் அதை ஒரு பிரயோஜனமான ஒன்றாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

183. அவன் என்னிடமாக "என்ன என்று உனக்குத் தெரியுமா? உனக்கு ஏற்கெனவே பத்தொன்பது அல்லது இருபது வயதாகி விட்டது. உனக்கு ஏற்கெனவே இருபது வயதாகி ஆகிவிட்டது. நீ மிக நீண்ட காலமாக காத்திருக்கிறாய்" என்று கூறினான்.

184. அப்பொழுது நான், "ஓ தேவனே, நான் நீண்ட காலம் காத்திருந்து விட்டேன். கர்த்தாவே, நீர் நான் கூறுவதை கேட்கா விட்டாலும் சரி, எப்படியாயினும் நான் உம்மிடமாக கூறப் போகிறேன். நான் எப்போதுமே இதை செய்ய விரும்பினேன்"

என்று கூறினேன். ஓ, சகோதரனே, அது அவரை காட்சியில் கொண்டு வந்தது. பாருங் கள்?

185. அந்த விதமாகத்தான், அந்த வழியில் தான் அவரை காட்சியில் கொண்டு வர முடியும். நீங்கள் ஒரு குழந்தை மாத்திரமே. அதற்காக சத்தமிட்டு ஓயாமல் அழு, அழு.

186. ஏதோ ஒன்றை, வேறு ஏதோ ஒன்றை அல்லது ஏதோ ஒரு பெரிய எழுதப்பட்ட ஒரு ஜெபத்தை ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் உச்சரிக்க ஒத்திகை செய்து விட்டு ஜெபத்தை கூற முயற்சிக்காதே. அது எந்த ஒரு நன்மை யும் அளிக்காது.

187. அவர்கள் கூறும் விதமாக "நீங்கள் அந்த ஜெபத்தை கூறிவிட்டாயா?" என்று கேட்கின்றனர். இல்லை. அவ்விதமாக கூறுவது ஒரு பாவம் ஆகும். நீங்கள் ஜெபியுங்கள். ஏதோ ஒன்றை கூறாதீர்கள்.

ஜெபியுங்கள். “எனக்காக ஒரு ஜெபத்தை சொல்லுங்கள்”

188. நான் “அதை எனக்கு செய்யாதீர்கள். எனக்காக நீங்கள் ஜெபம் செய்யலாம். ஆனால் எந்த ஒரு ஜெபத்தையும் எனக்காக உச்சரித்து சொல்லாதீர்கள்” என்றேன். அப்படி வேண்டாம் ஐயா, வேண்டாம். நீங்கள் ஜெபம் செய்யும் போது எனக்காக ஜெபிக்க மாத்திரம் செய்யுங்கள். சரி.

189. உங்கள் தேவைகளுக்காக ஓயாமல் வேண்டுங்கள் (cry). அது தான் தேவன் வைத்துள்ள வழியாகும். அந்த அநீதியுள்ள நியாயாதிபதி தன்னை நோக்கி இரவும் பகலும் ஓயாமல் கூப்பிட்ட பெண்ணைக் குறித்து இயேசு விவரித்தார் அல்லவா. அப்படியானால் பரிசுத்த ஆவி தங்களுக்கு வேண்டும் என்று தம்மை நோக்கி இரவும், பகலும் ஓயாமல் வேண்டிக்கொள்கின்றவர் களுக்கு எவ்வளவாக பரலோகப் பிதா அளிப்பார். நாடித் தேடுங்கள், தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருங்கள். தட்டுங்கள்,

தொடர்ந்து தட்டிக்கொண்டே இருங்கள். அவர் திறக்கும் வரை தொடர்ந்து அப்படி யாக செய்து கொண்டே இருங்கள். அத னுடனே அப்படியே தரித்திருங்கள். வாக் குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தையானது உறுதிப்படுத்தப்படும் வரைக்குமாக ஓயாமல் வேண்டுங்கள் (Cry), அப்பொழுது நீங்கள் பெறுவீர்கள். அதற்கு பின் நீங்கள் அதைக் குறித்து கவலை கொள்ள வேண்டியதில்லை. வேதம் அதை வாக்குத்தத்தம் செய்துள்ளது என்பதைப் பாருங்கள். பிறகு அதிலே அப்படியே தரித்திருந்து, நீங்கள் அதைப் பெறும் வரைக்கும் ஓயாமல் வேண்டுங்கள் (cry).

190. ஒரு சிறு குழந்தை பிஸ்கட்டைப் பார்த்து, அதை பெற விருப்பம் கொள்ளு மானால், அது உடனே அழ ஆரம்பிக்கும், அழுது கொண்டே இருக்கும், அழுது கொண்டே இருக்கும் காலால் உதைக்கும், கூச்சலிடும், சத்தமிடும், முகம் சிவந்து போகும். அப்பொழுது அதன் தாய் ஒரு பிஸ்கட்டை கொடுப்பார்கள். உடனே எல்லா

அழுகையும் நின்றுவிடும். பாருங்கள்? அக்குழந்தை தான் பார்த்ததை பெற்றுக் கொள்ளும், தான் விரும்பினதை பெற்றுக் கொள்ளும். நீங்கள் சாப்பிடுகின்ற ஐஸ் கிரீமை அக்குழந்தை நக்கி சாப்பிட விரும்புமானால், அதை பெற்றுக் கொள்ளும் வரைக்குமாக அது சந்தடி செய்து கொண்டே இருக்கும். பாருங்கள்?

191. ஆம், அந்த விதமாகத் தான் நாமும் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தில் ஒரு வாக்குத்தத்தத்தை நான் காண்பேனா னால், அப்பொழுது நான் அதில் அப்படியே தரித்திருந்து, தேவன் அதை எனக்கு கொடுக்கும் வரைக்குமாக நான் ஓயாமல் வேண்டிக்கொண்டே இருப்பேன் (cry). அப்பொழுது அவர் செய்வார். தம் கரங்க ளிலிருந்து அதை உங்களுக்கு அளிப்பார்; நீங்கள் பாருங்கள், இயற்கைப் பிரகாரமாகவும் அப்படி இருக்கின்றது. ஆகவே நீங்கள் அவ்விதம் கேட்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். நீங்கள் கேட்க வேண்டும்

என்று அவர் விரும்புகிறார். “அதிகமாக, கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்.”

192. அவருடைய வார்த்தை உறுதிப்படுத்தப்படும் வரைக்குமாக தொடர்ந்து ஓயாமல் (cry) கேட்டுக் கொண்டே இருங்கள். இப்பொழுது, நண்பர்களே, இன்னும் ஒரு நிமிடத்திற்கு தொடர்ந்து பார்ப்போமாக. வார்த்தை உறுதிப்படுத்தப்படும் வரைக்குமாக ஓயாமல் வேண்டுங்கள்.

193. தொல்லை என்னவென்றால், நாம் ஒரு பிஸ்கட்டைப் பெற்றுக் கொண்டு அவ்வளவு தான் இருக்கின்றது என்று நினைத்துக் கொள்கிறோம். ஆனால் மேஜை முழுவதுமாக ஆகாரம் இருக்கின்றதே. நாம் அந்நிய பாஷையில் பேசி விட்டு, “ஓ, சகோதரனே, அவ்வளவுதான்” என்று கூறி விடுகிறோம். ஓ, இல்லை. அப்படி இல்லை. அது அந்த காரியத்தில் கொஞ்சம் தான். ஆம். “ஓ, நான் போதுமான அளவிற்கு

சந்தோஷமடைந்தேன். கூச்சலிட்டேன்." அப்படி செய்வது இன்னும் சற்று கூடுதல் தான். ஆனால் இன்னும் நிறைய அதில் இருக்கின்றதே, தொடர்ந்து ஓயாமல் வேண்டிக் கொண்டே இருங்கள். அது கிடைக்கும் வரைக்குமாக..

194. அதுதான் தேவன் தம்முடைய மக்களுக்கு அளித்துள்ள வழியாகும். தேவன் அளித்துள்ள வழி என்னவென்றால் அவருடைய வார்த்தையை எப்போதுமே எடுத்து, அதை அப்படி பிடித்து அது உங்களுக்கு உறுதிப்படுத்தப்படும் வரைக்குமாக அப்படியே அதைப் பிடித்திருத்தல் ஆகும். இப்பொழுது, நான் கூறுவது புரிகின்றதா? தேவன் அளித்துள்ள வழி என்னவென்றால், வாக்குத்தத்தமானது உங்களுக்கு வெளிக் கொணரப்பட்டு அளிக்கப்படும் வரைக்குமாக அதை அப்படியே பற்றிப் பிடித்துக் கொண்டிருத்தல் ஆகும்.

***செய்தி:*** கடைசி காலத்திற்கென்று தேவனால் அருளப்பட்ட வழியை ஏற்றுக் கொள்ளுதல், ஜனவரி 15, 1963

★★★★★

30. இப்பொழுது, துரிதமாக கவனியுங்கள்; நாம் வேகமாக அதற்குள் போவோம், ஏனென்றால் என்னுடைய நேரம் போய்க் கொண்டேயிருக்கிறது, ஏறக்குறைய ஆறு நிமிடங்கள் தான். கவனியுங்கள்.

இப்பொழுது, அவன் யோர்தானைக் கடந்த போது, அவன் - அதன்பிறகு அவன், "நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு அவன், "... உம்முடைய ஆவி எனக்கு இரட்டிப்பாக வேண்டும்" என்று கூறினான்.

ஜனங்கள் ஒரு பெரிய காரியத்திற்காக விண்ணப்பம் பண்ண பயப்படுகிறார்கள், நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, இந்த மனிதன் நீண்ட காலமாக முடமானவனாக இருந்து வருகிறான்; அவனால் சுகமடைய முடியும் என்று நீர் நினைக்கிறீரா? என்று (கேட்கலாம்). நல்லது, கேட்பதற்கு அது ஒரு எளிதான காரியம் தான். பல்வலியை உடைய

யாரோ ஒருவரை தேவன் சுகப்படுத்துவதைக் (காட்டிலும்) அந்த மனிதனைச் சுகப்படுத்துவது ஒன்றும் தேவனுக்கு பெரிய விஷயம் அல்ல. அது அவருக்கு வெறுமனே அதே விதமாகத்தான் இருக்கிறது. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெரிய காரியத்திற்காக விண்ணப்பம் செய்யுங்கள். மிகுதியாகக் கேளுங்கள்.

அதன்பிறகு அவன், "நல்லது, இப்பொழுது, நீ ஒரு மகத்தான காரியத்தைக் கேட்டிருக்கிறாய்; ஆனால் இருப்பினும், நான் போகும்போது நீ என்னைக் கண்டால், நீ கேட்டுக்கொண்டபடியே அது இருக்கும்" என்றான்.

***செய்தி:*** கர்த்தருடைய கரம் அவன்மேல் வந்தது, ஏப்ரல் 3, 1954

★★★★★

42. சமீபத்தில், ஒரு மனிதன் சொன்னார், "நான்-நான் தேவனைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. உமக்குத் தெரியும், அவர் மிகவும் பிசியாக இருக்கிறார் என்று எனக்கு-

எனக்குத் தெரியும்" என்று கூறினான். முட்டாள்தனம். "நான்-நான் ... விரும்பவில்லை." நல்லது, அவருடைய ஏராளமான ஆசீர்வாதங்களை முழுவதும் பயன்படுத்தித் தீர்க்க முடியாது. வெளியே பசுபிக் சுமத்திரத்தின் நடுவில் இருக்கும், ஏறக்குறைய அரை அங்குல நீளமுடைய ஒரு மீனானது, "நான் இந்தத் தண்ணீரைக் குறைவாக குடிப்பது நல்லது, ஏனென்றால் நான் (அதை) வெறுமையாக்கி விடலாம்" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா.

எகிப்தின் மகத்தான களஞ்சியங்களின் கீழே இருக்கும் ஏறக்குறைய இவ்வளவு பெரிய ஒரு சிறிய சுண்டெலியானது, "உணவுப்பொருட்களின் பங்கீடாக நான் இந்த குளிர்காலத்தில் ஒரு நாளுக்கு வெறுமனே இரண்டு தானியங்களையே நான் சாப்பிடுவது நல்லது. புதிய அறுவடைக்கு முன்பே நான் இவைகளை வெறுமையாக்கி விடலாம்" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகிறதா. அது சிரிக்கத்தக்க கேலிக்கிடமானதாக இருக்கிறது. நல்லது,

இரக்கமுள்ள தேவனுடைய இரக்கங்களை உங்களால் முழுவதும் பயன்படுத்தித் தீர்க்க முடியும் என்று நினைப்பதும் (அதைவிட) இன்னும் அதிகமாக இருமடங்கு, ஆயிரம் மடங்கு அபத்தமானதாக இருக்கிறது. ஏன், அவர் தம்முடைய வழியை உங்களுக்குள் கட்டாயப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக் கிறார். "உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக் கும்படி, மிகுதியாகக் கேளுங்கள்." அவரை பயன்படுத்தித் தீர்க்க எந்த வழியுமே இல்லை.

காற்றமுத்த விசைக்குழாயைப் போன்று, நீங்கள் கூடுதலாக பம்ப் பண்ணும்போது, புது தண்ணீரைப் பெற்றுக்கொள்கிறீர்கள். ஓ, எனக்கு அது பிடிக்கும். அப்படியே தொடர்ந்து பம்ப் பண்ணிக்கொண்டே யிருத்தல், மகிமையானது வெளியே வந்து கொண்டிருக்கும் நீர்க்குழாயின் அருகில் ஜீவித்தல். எனக்கு அது பிடிக்கும்.

***செய்தி:*** சேர்ந்துரையாடல், நவம்பர் 25, 1960

★★★★★

ஜெபமானது கதவைத் திறக்கிறது: ஜெபம். "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய், விசுவாசித்து, எதைக் கேட்டாலும், நீங்கள் அதைப் பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி மிகுதி யாகக் கேளுங்கள்."

***செய்தி:*** எதிர்பார்ப்பு, பிப்ரவரி 7, 1961

★★★★★

95. நாம்-நாம் அவருடைய ஏராளமான ஆசீர்வாதங்களை பயன்படுத்தித் தீர்த்துவிடு வோம் என்று நினைக்கிறோம். நாம், "நல்லது, எனக்கு வேண்டிய ஆகாரத்தை (daily bread) தேவன் எனக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டேன். மிக அதிக காரியங்களை நான் அவரிடம் கேட்கக் கூடாது" என்று நினைக்கிறோம். ஓ, என்னே.

96. வெளியே இந்த சமுத்திரத்தின் நடுவில், ஏறக்குறைய *அவ்வளவு* நீளமுள்ள சிறிய மீன், "பொறுங்கள், நான் இந்தத் தண்ணீரை குறைவாக குடிப்பது தான் நல்லது.

நான் ஏதோவொரு நாளில், (அதை) வெறுமையாக்கி விடலாம்" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா?

97. எகிப்தின் களஞ்சியங்களின் கீழேயிருக்கும் ஏறக்குறைய இவ்வளவு பெரிய ஒரு சிறு சுண்டெலியானது, "நான் ஒரு நாளுக்கு ஒரு கோதுமை தானியத்தில் பாதியாக குறைத்துக்கொள்வது தான் நல்லது. நான் அடுத்த அறுவடைக்கு முன்பாகவே கையிருப்பு இல்லாமல் வெறுமையாக்கி விடலாம்" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா. என்னே. நல்லது, அது... அதை அப்படியே 100 பில்லியன் கொண்டு பெருக்கிக்கொள்ளுங்கள், நீங்கள்-நீங்கள் தேவனுடைய நன்மைகளையும் இரக்கத்தையும் பயன்படுத்தித் தீர்க்க முயற்சிப்பதும் அவ்வாறு தான் இருக்கிறது.

98. அவரால் கூடுமான எல்லாவற்றினாலும், அவர் தம்முடைய வழியை உங்களுக்குள்ளே பலவந்தப்படுத்த முயற்சித்துக்

கொண்டிருக்கிறார். "உங்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி மிகுதியாக கேளுங்கள்." அவர் தம்முடைய ஜனங்கள், மகத்தான காரியங்களைக் கேட்டு, மகத்தான காரியங்களுக்காக விசுவாசித்து, சந்தோஷமாயிருக்கவே விரும்புகிறார். நீங்கள் மலையின் மேல் இருக்கிற பட்டணமாக இருக்கிறீர்கள், உயர்வான நோக்கங்களையும், எதிர்பார்ப்புகளையும் கொண்டவர்களாக இருக்கிறீர்கள். நல்லது, இரக்கம், இன்றிரவு குருடன் தன்னுடைய பார்வையைப் பெற்றுக்கொள்வதை நான் காண்பேன் என்றால், நாளை இரவில் மரித்தவன் உயிரோடெழும்புவதைக் காண விரும்புகிறேன். ஆம், ஐயா. நான்... விரும்புகிறேன். நான்-நான் அப்படியே தொடர்ந்து மகத்தான காரியங்களுக்காக விசுவாசித்துக் கொண்டேயிருக்கிறேன்.

***செய்தி:*** தாவீதின் குமாரனே, என்மேல் மனமிரங்கும், பிப்ரவரி 15, 1961

★★★★★





# மிகுதியாக (வேண்டியமட்டும்) கேளுங்கள்

## ASK ABUNDANTLY

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து